**IN THE COURT OF THE XXIII METROPOLITAN MAGISTRATE, SAIDAPET, CHENNAI-15**
**DVC.No. 53/2025**

**ம.சா 1 – சந்தோஷி** **நாள் 12.08.2026**

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்தோஷி |
| வயது | : | 31 |
| தந்தை பெயர் | : | உதயகுமார் |
| முகவரி | : | பிளாட் எண்2, முதல் தளம், ஸ்ரீ குரு ரெசிடென்ஸி, காவேரி ரங்கன் நகர், சாலிகிராமம், சென்னை |
| தொழில் | : | தனியார் நிறுவன ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 on the 12th day of August 2026

**மனுதாரர் ஆஜர், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜரில்லை, எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**<u>மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>**

**1.** நான் இவ்வழக்கில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். 19.05.2019 தேதியிட்ட திருமண அழைப்பிதழ் **(திருமண அழைப்பிதழ் மசாஆ 1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் **(திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் மசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் (**குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் மசாஆ 3ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 19.01.2024ம் தேதியிட்ட பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட

புகார் மனு ஏற்பு ரசீதின் நகல் **(புகார் மனு ஏற்பு ரசீதின் நகல் மசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது, **(ஆதார் அடையாள அட்டை நகல் மசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய தேதி ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்ட பின் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

K R PADMA KUMARI
Digitally signed by K R PADMA KUMARI
Date: 2026.08.12 14:46:20 +0530

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்.**

**சைதாப்பேட்டை, சென்னை–15**